# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் “A+” தரச் சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.**

**முனைவர் சு. ஸ்ரீனிவாசராகவன் , எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்.சி., பி.எச்.டி.,**
**தேர்வு நெறியாளர் (பொ.)**

அலுவலகம் : 0431-2407016,2407060
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


---

ந.க.எண்:104/A3/தே.நெ.அ./ம.பி.2/ஏப்ரல் 2023 நாள்: 01.03.2023

**பெறுநர்:**

**முதல்வர்**
**பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து கல்லூரிகள்**

அன்புடையீர்,

பொருள்: ஏப்ரல் 2023 பருவத்தேர்வு - தொழில்முறை ஆங்கிலம் (Professional English) கற்பிக்கப்படும் ஆசிரியர் பெயர்ப்பட்டியல் கோருதல் - தொடர்பாக.

******

பாரதிதாசன் பல்கலைக்கழக இணையதளத்தில் http://www.bdu.ac.in/examinations/profeng.php என்கிற இணைப்பில் காணப்பெறும் படிவத்தை பதிவிறக்கம் செய்து அதில் ஏப்ரல் 2023 பருவத்திற்கு தங்கள் கல்லூரியில் கீழே குறிப்பிட்டுள்ள **தொழில்முறை ஆங்கிலம் (Professional English) தாள்களுக்கு, தாள்வாரியாக** கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைப் பூர்த்தி செய்து **15.03.2023-க்குள்** அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. **Professional English for Physical Sciences**
2. **Professional English for Life Sciences**
3. **Professional English for Arts & Social Sciences**
4. **Professional English for Commerce &Management**

படிவங்களைப் பூர்த்தி செய்யும் முன் கீழ்க்காணும் விவரங்களின் மீது தனிக்கவனம் செலுத்தும்படி கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. **தொழில்முறை ஆங்கிலம் (Professional English) தாள்வாரியாக** கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் அவர்களின் பணிமூப்பு (Seniority) அடிப்படையில் பட்டியலிடவும். பல்கலைக்கழகத் தேர்வாளர் பட்டியலில் இல்லாத ஆசிரியர்களின் பெயர்களைக் கண்டிப்பாக பரிந்துரைக்க வேண்டாம்.

2. மாற்றுப் படிவங்களை உபயோகிக்க வேண்டாம்.

3. பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து http://www.bdu.ac.in/examinations/profeng.php பதிவிறக்கம் செய்யப்பட்ட MS-EXCEL FORMAT-ல் பூர்த்தி செய்து confidential2@bdu.ac.in என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு **15.03.2023-க்குள்** அனுப்பி வைக்கவும். பதிவிறக்கம் செய்யப்படாத **MS-EXCEL FORMAT-ல் பெறப்படும் மென் நகலினை (Soft Copy) ஏற்றுக் கொள்ள இயலாது.** மேலும் மின்னஞ்சலுக்கு அனுப்பும் படிவத்தின் நகல் ஒன்றினை கல்லூரி முதல்வரின் கையொப்பமிட்டு அஞ்சல் வழியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு **15.03.2023-க்குள்** அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்டவாறு அனுப்பி வைக்கப்படாத பட்டியல்கள்/காலம் கடந்து கிடைக்கப்பெறும் பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. **MS-EXCEL FORMAT தவிர .jpg, .pdf, .doc இந்த வடிவத்தில் பெறப்படும் மின்னஞ்சல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

ஏப்ரல் 2023 தேர்வு முடிவுகளை விரைவாக அறிவிக்க ஏதுவாக தங்களது முழு ஒத்துழைப்பினை நல்கி இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து செயல்படுமாறு அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**Sd-**
**தேர்வு நெறியாளர்(பொ.)**